★ காஞ்சிபுரம்
★ பெனாரிஸ்
★ செலி தஞ்சுர்
★ பாட்லி
★ பட்டு வேஷ்டிகள்
மற்றும் சகலவிதமான
★ பிளவ்ஸ் பீஸ்
வகைகளுக்கும்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
உட்புறம்
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு
ஏற்ற, உடுபுடைவைகள்
ராசி சில்க்ஸ்
70, நியூ மார்க்கட்,
யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 கார்த்திகை 18 வெள்ளிக்கிழமை (03 – 12 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 07

திருமலையில் புலிகள் அதிரடி தாக்கு; அதிகாரி உட்பட 8படையினர் பலி!

நேற்றுக் காலை சம்பவம்

கொழும்பு, டிசம்பர் 3

திருகோணமலை மாவட்டம், மூதூரில் உள்ள ஈச்சிலம்பத்தையின் வடபகுதியான பூநகர் என்ற இடத்தில் நேற்றுக்காலை விடுதலைப் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் ஓர் அதிகாரி உட்பட இராணுவத்தினர் எட்டுப் பேர் உயிரிழந்தனர்.

வீதி ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த படையினர் மீதே விடுதலைப் புலிப் போராளிகள் தாக்குதல் நடத்தினர் என்று கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

முதல் நாள் இரவு ரோந்துக் கடமையில் ஈடுபட்டுவிட்டு, காலை முகாமுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் மறைந்திருந்து தாக்குதல் நடத்தினர் என்று எஜென்சிச் செய்திகள் தெரிவித்தன.

சம்பவம் நடந்த இடத்திற்கு மேலதிக துருப்புக்கள் உடனடியாக அனுப்பி வைக்கப்பட்டன என்று பாதுகாப்பு செயற்பாட்டுத் தலைமை அலுவலகம் அறிவித்தது.

(ஒ-எ-5)

ஆயுதக் கொள்வனவுக்கு அரசு அங்கீகாரம் அளிப்பது சந்தேகம்?

கொழும்பு, டிச. 3

இராணுவத் தலைமையகம் பட்டியலிட்டுள்ள ஆயுத வகைகளைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் அங்கீகாரம் அளிப்பது நிச்சயமற்றதாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யுத்தகளத்தில் இழந்த ஆயுதங்களுக்குப் பதிலாக, புதிதாக ஆயுதங்கள் வாங்கப்பட வேண்டும் என்று சில ஆலோசகர்கள் அரசாங்கத்துக்கு சிபார்சு செய்துள்ளனர்.

எனினும், மேலதிக தளபாடங்களைக் கொள்வனவு செய்வதற்கு முன்னர், தேவைப்படும் ஆயுதங்கள் பற்றிய மதிப்பீடு ஒன்றை நடத்த வேண்டியது அவசியம் என்றும் —

அப்படியான மதிப்பீடு இன்றி அவசரமாக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது ஆயுத வர்த்தகர்களையும் அவர்களது சகபாடிகளையும் செல்வந்தர்களாக்குவதாகவே முடியும் என்றும் அந்த ஆலோசகர்கள் அரசுக்குக் கூறியுள்ளனர்.

இதேவேளை— இந்த ஆயுதக் கொள்வனவு இடம்பெறும் போது லட்சக்கணக்கான ரூபா பணம் கமிஷனாக பரிமாறப்படும் என்பதை சொல்ல வேண்டிய தேவை இல்லை— என்று ''சண்டே ரைம்ஸ்'' பாதுகாப்பு துறைச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு கனடாவில் குழு

லண்டன், டிச. 3

இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கான முயற்சிகளை முன்எடுத்துச் செல்வதற்காக சமாதான அமைப்புப் பிரதிநிதிகள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் —

இந்தப் பொறுப்பு கனடாவின் சமாதான நிதியத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்றும் — யாழ். பல்கலைக்கழகத்தை சேர்ந்த டாக்டர் வண. பிதா சந்திரகாந்தன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.

கனடாவில் ஒட்டாவாவில் நடந்த 'சமயங்களும் சமாதானமும்' என்ற தலைப்பிலான மாநாட்டில் எடுக்கப்பட்ட முடிவுகள் குறித்து பி.பி.ஸிக்கு அவர் பேட்டியளித்தார்.

இந்த மாநாட்டில் இலங்கைப் பிரச்சினை குறித்து ஆராயப்பட்டு வெளியிடப்பட்ட பிரகடன அறிக்கையும், செய்திகளும் நேற்று முன்தினம் உதயனில் வெளியாகியிருந்தது தெரிந்ததே.

விமான தாக்குதலை கண்டித்து இன்று மௌன ஊர்வலம்

யாழ்ப்பாணம், டிச. 3

குருநகர் சென் ஜேம்ஸ் தேவாலயத்தின் மீதான விமானத் தாக்குதலையும் —

மற்றும் வழிபாட்டுத் தலங்கள், மருத்துவமனைகள், பாடசாலைகள், குடியிருப்புக்கள், அரச செயலகம் ஆகியவற்றின் மீதான தாக்குதல்களையும் கண்டித்து இன்று நகரில் மாபெரும் மௌன ஊர்வலம் நடைபெறவுள்ளது.

யாழ் பிரதான வீதியில் உள்ள குருநகர் சென் ஜேம்ஸ் தேவாலயத்தின் முன்பாக இருந்து இன்று காலை 9 மணிக்கு ஊர்வலம் ஆரம்பமாகும். தேவாலய பங்குத் தந்தை வண. பிதா ஆர். எம். ஜி. நேசநாயகம் ஊர்வலத்துக்குத் தலைமைவகிப்பார்.

ஊர்வலம் பிரதான வீதி வழியே ஆரம்பமாகி முதலாம் குறுக்கு வீதி, ஆஸ்பத்திரி வீதி, ஸ்ரான்லி வீதி, இராசாவின் தோட்ட வீதி வழியே சென்று றக்கா வீதி — கோவில் வீதிச் சந்தியை அடையும். அங்குள்ள செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் அலுவலகத்தில் மகஜர் ஒன்று கையளிக்கப்படும்.

பின்னர் ஊர்வலம் அங்கிருந்து கோவில் வீதி, கண்டி வீதி, ஆஸ்பத்திரி வீதி வழியாக யாழ். செயலகத்தைச் சென்றடையும் அங்கு வைத்து ஜனாதிபதிக்கு விலாசமிடப்பட்ட மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்படும்.

இன்றைய ஊர்வலத்தில் சர்வ மதத் தலைவர்களும், பங்கு கொள்ள உள்ளனர்.

யாழ். ஆயர் கலாநிதி அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள், தென்னிந்திய திருச்சபையின் முன்

(4 ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரவி

நகரை நோட்டமிட்ட ஹெலி

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ்ப்பாணப் பகுதியை நோக்கி நேற்று மாலை 4.30 மணியளவில் வந்த ஹெலி ஒன்று சுமார் 15 நிமிட நேரம் வட்டமிட்டுச் சென்றது.

யாழ். போதனா வைத்தியசாலை அமைந்துள்ள பாதுகாப்பு வலயம், அரியாலை, நல்லூர் பகுதிகளை உள்ளடக்கி ஹெலி வட்டமிட்டது —

இதேபோன்று குடாநாட்டின் மற்றும் சில இடங்களிலும் ஹெலியின் நோட்டம் தெரிந்தது என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

மக்கள் மத்தியில் ஹெலி நோட்டம் விடுவது போல், அதுதான் தோற்றம் தருகிறது என்றும் அவர் கூறினார்.

(இ-111-162-17-15)

தொண்டமானாறு பகுதியில் படையினர் பீரங்கித் தாக்கு!

படகுகள் சில சேதம்

தொண்டமானாறு கடற்பரப்பில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் திடீரெனப் பிரவேசித்த இரு கடற்படைப் படகுகளில் இருந்து கரையோர குடியிருப்புப் பகுதிகள் மீது கடும் பீரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது. சுமார் 15 நிமிட நேரம் இத் தாக்குதல் நீடித்தது.

கடற் கரையோரங்களில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீதும் படையினர் தாக்குதலை நடத்தினர். மீனவர்கள் கடலில் பாய்ந்து தப்பிக் கொண்டனர்.

படையினர் ஏவிய பீரங்கிக் குண்டுகள் கெருடாவில், தொண்டமானாறு பிள்ளையார் கோவிலடி வல்வெட்டித்துறை, ஊரிக்காடு, காட்டுப்புலம் பகுதிகளில் விழுந்து வெடித்தன.

பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்த வேளை எழுந்த பெரும் சத்தத்தால் மேற்படி பகுதிகளில் மக்கள் பதற்றமடைந்தனர். சிலர் பாதுகாப்பான இடங்களைத் தேடிச் சென்றனர். படையினர் நடத்திய தாக்குதலில் படகுகள் சில சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-155-173-5)

குமாரமங்கலம் இராஜினாமா!

தமிழ் நாட்டைச் சேர்ந்த மத்திய இணை அமைச்சர் ரங்கராஜன் குமாரமங்கலம் நேற்று தமது பதவியை ராஜினாமாச் செய்து விட்டார்.

பிரதமர் நரசிம்மராவின் கோரிக்கையைத் தொடர்ந்து திரு. குமாரமங்கலம் தமது ராஜினாமாக் கடிதத்தை சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி அதனை ஏற்றுக் கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

உத்தரபிரதேச மாநிலத்தில் இந்திரா காங்கிரஸ் படு தோல்வி அடைந்ததற்கான தார்மீக பொறுப்பை ஏற்று காங்கிரஸ் தலைமைப் பீடம் கூண்டோடு பதவி விலகவேண்டும் என்று திரு. குமாரமங்கலம் பிரதமரைக் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

இக்கடிதம் பற்றி புதுடில்லியில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற இந்திரா காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் ஆராயப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அக் கடிதத்தில் அவர் பிரதமரைக் கடுமையாக விமர்சித்திருந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

ஜி. சீ. ஈ சாதாரணதரப் பரீட்சை:

முதல் தொகுதி வினாத்தாள் நேற்று யாழ். வந்து சேர்ந்தது

யாழ்ப்பாணம், டிச, 3

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி. சீ. ஈ சாதாரணதர பரீட்சைக்கான — முதல் ஆறு நாட்களுக்குரிய வினாத்தாள்கள் — நேற்று யாழ். கல்வி அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டன.

கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் வினாத்தாள்கள் பலாலிக்கு எடுத்துவரப்பட்டிருந்தன. கொழும்பு கல்வித் திணைக்கள அதிகாரியான திரு. த. மனோகரன் இவற்றை எடுத்து வந்துள்ளார்.

வினாத்தாள்கள் நேற்று காங்கேசன் துறைமுகம் கொண்டு வரப்பட்டு, வாகன கப்பல் மூலம் அவை பருத்தித்துறைக்கு எடுத்து வரப்பட்டன.

பருத்தித்துறை துறைமுகத்தில் வைத்து யாழ்ப்பாணம் வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அவற்றை பொறுப்பேற்றார்.

பரீட்சை நாட்களில் குண்டுவீச்சை நிறுத்துக

நாடாளுமன்றில் கோரிக்கை

கொழும்பு, டிச. 3

எதிர்வரும் 6 ஆம் திகதி ஆரம்பமாகும் ஜி. சீ. ஈ. (சாதாரண) பரீட்சை நாட்களில் குண்டுவீச்சை நிறுத்த வேண்டும்.

இப்படியான கோரிக்கை தமிழ் எம். பியான மாவை சேனாதிராசாவால் நேற்று நாடாளுமன்றத்தில் விடுக்கப்பட்டது.

கடந்த வாரங்களில் யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ளப்பட்ட கண்முடித்தனமான குண்டுவீச்சுகளால் பலர் கொல்லப்பட்டனர். உடைமைகள் நாசமாகின பரீட்சை நாட்களில் குண்டுவீச்சு நடத்துவதால், மாணவர்கள் மன நிலை பாதிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

(இ-3)

தென் இலங்கையில்

கைதான 500 தமிழர் குறித்து தகவலில்லை

யாழ்ப்பாணம், டிச. 3

தென்இலங்கையில் இராணுவப் பொலீஸார் மற்றும் ஆயுதக் குழுக்களால் கைது செய்யப்பட்டவர்களில் ஐந்நூறு தமிழர்கள் பற்றிய தகவல் எதுவும் தெரியவில்லை.

காணாமற்போனோர் சங்கத்தின் தலைவர் விஜயதாஸ பத்திரான இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும், மற்றும் மலையகப் பகுதிகளிலும் கைதான மேற்படி ஐந்நூறு இளைஞர் யுவதிகள் எங்கே தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரியவில்லை என்றும், அவர்களின் பெற்றோர்களுக்கும் அவர்கள் பற்றிய தகவல்கள் அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(இ-5)

தடுப்பு முகாமில் பொலீஸார் தவறவிட்ட துப்பாக்கி!

புலிகளிடம் பறிகொடுத்தனரா?

[கொழும்பு, டிச. 3

தமிழ் இளைஞர்கள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் பெலவத்தை தடுப்பு முகாமில் வைத்து தன்னியக்கத் துப்பாக்கி ஒன்றைத் தவறவிட்ட இரு கான்ஸ்டபிள்களை மத்துகம நீதிவான் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

கே. எம். தயானந்த பண்டார, புத்ததாச சிறிமான ஆகிய இருவருமே ஒருவார காலம் மறியலில் வைக்கப்பட்டனர்.

தடுப்பு முகாமில் வைத்து கடந்த 15 ஆம் திகதி காணாமற் போயுள்ளதாகக் கூறப்படும் 84 எக்ஸ் தன்னியக்கத் துப்பாக்கி பற்றி நான்கு தினங்களின்பின்னரே பொலீஸ் நிலையத்திற்கு தகவல் கிடைத்ததாகக் கூறப்பட்டது.

இந்த ஆயுதம் புலிகள் இயக்கத்தவரிடம் போய்ச் சேர்ந்திருக்குமா என்ற சந்தேகம் இப்போது எழுந்துள்ளதாக பொலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-17)

இ. தொ. கா - சுதந்திரக்கட்சி கூட்டு சாத்தியம்

சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, டிச. 3

தொண்டமானின் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் கூட்டு அமைக்கும் சாத்தியக் கூறுகள் உள்ளன.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சண்டே ரைம்ஸுக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளராக தாம் போட்டியிட இருப்பதாக அறிவித்த அவர், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி மற்றும் எதிர்க்கட்சிகளுடன் பெரும்பாலும் இ. தொ. காவும் தம்மை ஆதரிக்கும் என்றார்.

தொண்டமானுடன் கூட்டுச் சேர்வதால் சுதந்திரக் கட்சி சிங்களவர்களின் ஆரம்பமாகும் இழந்து விடாது என்றும் —

17 ஆண்டுகளாக தொண்டமானுடன் கூட்டு வைத்திருந்த ஐக்கிய தேசியக் கட்சி சிங்களவாக்குகளை இழந்து விடவில்லையா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

ஜி. சீ ஈ. உயர்தரம்:

பரீட்சை முடிவுகளை எடுத்துவர முயற்சி

யாழ்ப்பாணம், டிச. 3

கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்த ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சை முடிவுகளை இங்கு எடுத்துவர யாழ். கல்வி அலுவலக அதிகாரிகளால் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று இப்பரீட்சை முடிவுகள் கொழும்பில் வெளியிடப்படவிருந்தது தெரிந்ததே.

யாழ். மாவட்ட மாணவர்களின் முடிவுகள் எதிர்வரும் 9 ஆம் திகதி இங்கு எடுத்து வரப்படும் என கல்வி அலுவலக அதிகாரி தெரிவித்தார்.

ஆனால் அதற்கு முன்பாக பரீட்சை முடிவுகளை இங்கு எடுத்துவர செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகள் முயற்சி மேற்கொண்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-9)

யாழ். மாவட்டத்துக்கு தபால் அனுப்ப புதிய நடைமுறை

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். மாவட்டத்துக்கு தபால் அனுப்புவதற்கு புதிய நடைமுறை ஒன்றை தபால் திணைக்களம் அமுல் செய்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்துக்கு கொழும்பில் இருந்து செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி பயணம் செய்யும் கப்பலில் மட்டுமே தபால் பொதிகளை அனுப்ப முடியும் என்று தபால் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அடுத்து வரும் 'றுகுணு' கப்பலில் செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதி இருக்க மாட்டார் என்றும் —

அதனால் தபால் பொதிகள் அதில் அனுப்பப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அநேகமாக அடுத்த வாரத்தில் வரும் 'மார்கோ' கப்பலில் தபால் பொதிகள் எடுத்து வரப்படலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-5)

47 பயணிகளுடன் கோமாரி புறப்பாடு

பருத்தித்துறையில் பொருள்கள் இறக்கிமுடித்த 'கோமாரி' கப்பல் 47 பயணிகளுடன் திருகோணமலை நோக்கி புறப்பட்டது.

43 அரச ஊழியர்களும், மற்றும் அவசர சிகிச்சைக்காக 3 நோயாளிகளும், ஒரு டாக்டரும் கப்பலில் சென்றுள்ளனர்.

இக்கப்பல் பயணிகளை திருகோணமலையில் இறக்கிவிட்டு திருத்த வேலைகளுக்காக கெர்மும்பு டொக்யாட்டுக்கு செல்லும்.

(இ-17-15-35)

திருமலைக்கு வடக்கே தாழமுக்கம்

வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று திருகோணமலைக்கு வடக்கே சுமார் 500 மைல் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

இது மேலும் தீவிரமடைந்து வடமேற்குத் திசையில் நகர்ந்து செல்லக் கூடும்.

வடக்கு – கிழக்கு கரையோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள கடற் பிரதேசத்தில் மட்டும் மந்தாரமுமாக இருக்கும். இடைக்கிடை பலத்த காற்றுடன் மழை பெய்யும். கடலும் கொந்தளிப்பாக இருக்கும். வடக்கு – கிழக்கு, வடமத்திய மாகாணங்களில் சில இடங்களில் பலத்த மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

(இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

சுத்த இன பொமனேரியன் ஆண், பெண் நாய்க்குட்டிகள் பூச்சி அகற்றிய நிலையில் விற்பனைக்குண்டு. தொடர்பு: முகுந்தன் வைத்தீஸ்வரன், மாலிப்பாய் இந்துக்கல்லூரி ஆண்கள் பாடசாலைக்கு முன், மாலிப்பாய்.

(6827)

கோப்பி அரைக்கும் மெஷின், T. V., ஆங்கில நட்டக்கூகள், கண்ணாடி (கடை) சோக்கேஸ், மர & இரும்பு அலுமாரிகள், கட்டில்கள், மோட்டார்கள், மீன் தொட்டிகள் முதலியன டால் கொம்பொளக்ஸ், 161, பிரதான வீதி, (மக்கள் வங்கி அருகில்), யாழ்ப்பாணம்

(6824)

சிறுவர் நூல்கள்

நத்தார், புதுவருட காலங்களில் சிறுவர்களுக்கு பரிசில்களை வழங்கக் கூடிய, இங்கிலாந்து, யப்பான் நாட்டுப் புத்தகங்களை தொகையாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள; ஸ்ரீகாந், மக்மிலன் புத்தகசாலைகள், யாழ்ப்பாணம். (சி/6566)

வெளிவந்துவிட்டது!

இலக்கிய வித்தகர் த. துரைசிங்கம் எழுதிய தமிழ் இலக்கணம் வினா-விடை (ஆண்டு-9, 10, 11) வெளிவந்து விட்டது. பரீட்சைகளில் அதிசிறப்புச் சித்திபெற உதவும் அரிய வழிகாட்டி. பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(28238)

சமூகக்கல்வி

ஆண்டு 11 சமூகக்கல்விப் பட வேலை கமலா குணராசா வெளிவந்துள்ளது. (ஒப்செற் பதிப்பு) நூறித மீட்டலுக்குகந்தது. எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

(28228)

திருமண சேவை

28 வயது, தொழில்நுட்பக் கல்லூரியில் படித்த, சிவத்த அழகிய, 4இல் செவ்வாயுள்ள பட்டதாரி மணமகள் தேவை. கொழும்பு வந்து விவாகம் செய்வார். தமையனும், சகோதரியின் புருஷனும் பொறியியலாளர்கள். தொடர்பு: இ. கனகசபாபதி விதானையார், 22, சிவப்பிரகாசம் வீதி, வண்ணார்பண்ணை. (6828)

AVAILABLE

The Life of Sir. Pon Ramanathan. covers the Biography of Sir Pon. Rama-nathan during a crucial period in the history of Ceylon— 1910 — 1930. From the inemitable pen of Mr. M. Vythilingam. Not to be missed by scholars and students of the history of Ceylon. Limited copies available— 527, K. K. S. Road, Jaffna, (சி-6634)

மனைப்பொருளியல்

ஆண்டு 9, மாணவர்களுக்குப் பயன் தரும் மனைப் பொருளியல் வினா - விடை வெளிவந்துவிட்டது. பரீட்சையில் அதிசிறப்புச் சித்தி பெற உதவும் நூல். பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

(28237)

பாலர் ஆசிரியராக...

பாலர் ஆசிரியர் பயிற்சிக்கு க. பொ. த. (சா/த) கடைசித் தகைமை, சனி, ஞாயிறு வகுப்பு நடைபெறும். நேரில் சமுகம்தர முடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி, 73, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(6832)

வாடகைக்கு

பாடசாலை மாணவருக்கு அறை வாடகைக்கு உண்டு. கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்: இல. 576, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (28256)

மணமகன் தேவை

க. பொ. த. (உ. த) படித்த 7இல் செவ்வாய் தோஷமுள்ள 29 வயது அழகிய மணமகளுக்கு பொருத்தமான மணமகன் தேவை. அவிட்டம் 3ஆம்பாதம். ஆசிரியர், வங்கி அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது. சீதனம் நேரில் பேசித் தீர்க்கலாம். தொடர்பு: V. P. சண்முகநாதன், 15(3)பி பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(28239)

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்
யாழ். கிளை
அறிவித்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ் கிளை அண்மையில் நடட்சசு சுருக்கெழுத்தாளர், ஆசிரியர், கணக்குப் பதிவாளர் பதவிகளுக்காக நடத்திய செய்முறைப் பரீட்சையில் தோற்றிய தகுதி வாய்ந்த பரீட்சார்த்திகளுக்கான நேர்முகப் பரீட்சை 04-12-93 முற்பகல் 10-00 மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும்.

செஞ்சிலுவைச் சங்க சேவையில்,
கௌரவ செயலாளர்.

[சி-6633]

31ஆம் நாள் நினைவஞ்சலி

(03 — 12 — 1993)

எமது பாடசாலையின் ஆசிரியையான
திருமதி மாணிக்கம் பாலசுப்ரமணியம்
அவர்களின் கணவரான

திரு வே. பாலசுப்பிரமணியம்

அவர்களின் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுவதுடன், எமது ஆழ்ந்த அனுதாபத்தையும், கவலையையும் குடும்பத்தினருக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம்

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

கோப்பாய் தெற்கு,
கந்தவேள், த. க. பாடசாலை (28201)

இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 19 — 05 — 1933

மறைவு: 26 — 11 — 1991

திருமதி கனகம்மா பொன்னித்துரை

(வேலணை கிழக்கு)

திதி: 03 - 12 - 1993

சுகிலத்தில் எமைத்தந்த அன்புத்தெய்வம் அம்மாவே!
இதயத்தில் உம்மை வைத்து ஏங்குகின்றோம் —
அம்மாவே!
உயிருடன் கலந்தே ஒளிதந்த மொழுகுவர்த்தி
உருகி முடிந்ததுவோ இரண்டு ஆண்டுகள் — முன்
பாசமுடன் நேசம் வைத்தே பக்குவமாய் —
எமை வளர்த்து
சீலமுடன் கல்விதந்து சீருடன் வாழவைத்த
அன்னை நீயம்மா ஆண்டு பல சென்றாலும்
மண்ணில் நாம் இருக்கும் வரை மறவோம் நின் —
தியாகம் அம்மா!

உம்களை அன்புடன் நினைவு கூரும்:
குடும்பத்தினர்.

16ம் கோவில் வீதி,
வேலணை.

மலரும் நினைவுகளுடன் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர் தருமலட்சுமி திருநாவுக்கரசு

(செயலாளர்)

வேலணை மேற்கு

மண்ணில்: 31 — 05 — 1909
விண்ணில்: 04 — 11 — 1993

எங்கள் குடும்பத்தின் குலவிளக்காகவும் எமது உயர் வாழ்வுக்கு வழிகாட்டியாகவும் விளங்கிய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மறைவின் போது வருகை தந்தும், அனுதாபச் செய்தி அனுப்பியும், பல வழிகளிலும் எமக்கு உதவி புரிந்த அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். அத்துடன் இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் 04 - 11 - 1993 நாளை நடைபெறும் சபிண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இராசரெத்தினம் குடும்பத்தினர்,
சீவரெத்தினம் குடும்பத்தினர்,
ஆ. ச. சிவஞானம் குடும்பத்தினர்,
மு. திருநாவுக்கரசு குடும்பத்தினர்
மற்றும் குடும்ப அங்கத்தவர்களும்,
அன்னாரின் சகோதரங்களும்

தாவடி தெற்கு,
நல்லூர்.

[28242]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GREETINGS TO "THE BREEZE"

The Old Students' Association of Kokuvil Hindu College extends its Warmest Greetings to "THE BREEZE", the maiden Souvenir of the English Union of Kokuvil Hindu College, which is being released today.

Long live "THE BREEZE"!
May you blow forever!

O. S. A.,
KOKUVIL HINDU COLLEGE,
03 - 12 - 1993.

(C-6569)

ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 28 — 02 — 1965

மறைவு: 13 — 12 — 1992

செல்வன் சிவந்தன் போதநாதன்

நாவற்குடா, மட்டக்களப்பு
(4ஆம் வருட சித்த மருத்துவப் பிரிவு மாணவன்)

திதி: 03 — 12 — 1993

ஆண்டு ஒன்று அகன்றாலும் உங்கள் அன்புஎம்மை விட்டு அகலாது

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்:
சித்த மருத்துவப் பிரிவு
விரிவுரையாளர்கள், மாணவர்கள்,
ஊழியர்கள்.

இன்று 3 - 12 - 1993 சித்த மருத்துவப் பிரிவு மண்டபத்தில் காலை 10-00 மணிக்கு நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெற உள்ளதால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(28246)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி
ஆண்டு 6 அனுமதி - 1994

03—12—1993 முதல் கல்லூரி அலுவலகத்தில் அனுமதிக்கான விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

— அதிபர்

வைத்தீஸ்வராக் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

(6834)

கேள்வி கோரல்
சுகாதார திணைக்களம் யாழ்ப்பாணம்

எமது திணைக்களத்தினால் பின்வரும் மோட்டார் வாகன உதிரிப்பாகங்களிற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. இக்கேள்விப் பத்திரங்களை தாங்களாகவே தாயாரித்து **10—12—93** திகதிக்கு முன்னதாக கிடைக்கத்தக்கதாக சீல் வைக்கப்பட்ட கடித உறையில் வைத்து இப்பணிமனையில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கோரப்படும் பொருள்கள் **20—12—93** ஆம் திகதிக்கு முன்னதாக எமக்குக் கிடைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். கேள்வி கோரப்படும் பொருள்கள் அல்லது சேவைகளின் முழுவதற்குமோ அல்லது அதன் ஒரு பகுதிக்கோ விண்ணப்பிக்கலாம். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "வாகன உதிரிப் பாகங்களிற்கான கேள்விப் பத்திரம்" என எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

1. பற்றறி (Battery) 12V 90Amp. — 05
2. ரயர், ரியூப் அளவு — 205 x 16 — 12
   50 x 7 x 16 — 04
   600 x 14 — 09
3. பியுவல் பில்ற்றர் (Fuel filter)
   Model
   No: 1. MB 820900 (Pajero Ambulance) — 03
   2. PFC 158, OEM 23308 — 64010 (Toyato Ambulance) — 04
   3. 04034 — 56011 (Toyato Lorry) — 02
4. ஒயில் பில்ற்றர் (Oil filter)
   1. MB 06782 (Pajero — Jeep) — 02
   2. 04152 — 46011 (Toyato Lorry) — 02
   3. PFC 101, OEM 15600 — 41010-(Toyato Ambulance — 04
5. பிறேக் லைனிங் செற் — பஜரோ, மொடல் டொயாட்டா அம்புலன்ஸ், லான்ட்றோவர்.
6. ஷக்கிள் புஷ் (Shackle Bush) பஜரோ அம்புலன்ஸ்
7. ஷொக் அப்சோபர் (Shock Absorber) லான்ட்றோவர் (Land Rover)
8. வாகனங்களிற்கு பாதுகாப்பிற்காக முன்னால் பொருத்தப்படும் இருப்புப் பிடிகள் மூன்று (3) பஜரோ, அம்புலன்ஸ் ஆனவை.
9. வாகன மேற்தளத்தில் "சிலுவை" அடையாளம் இடுதல் (சிவப்பு ஸ்பிறே பெயின்ட்) வாகனம் (அளவு 12" — 50")



10. செஞ்சிலுவைக் கொடி மற்றும் கொடி பொருத்தும் தம்பம் ஆயன விரிபோலிந்து இணைத்தல். கெற்லைற் பெற் — டொயாட்டா அம்புலன்ஸ்

டாக்டர் பொ. இரத்தினசபாபதி
பிராந்திய பணிப்பாளர்

விக்டோரியா வீதி,
யாழ்ப்பாணம். (சி/6618)

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் செல்லத்துரை கனகசபாபதி

(முன்னாள் A. G. A., ஓட்டு சுட்டான்)

மலர்வு: 22—03—1941
உதிர்வு: 26 11—1991

திதி: 03 - 12 - 1993

பாசம் மிக்கோன் பரிதியைப் போன்றோன்
நேசத்தோடும் மும்மொழி பயின்றோன்
மடியிலேத்திய மாதாமுன் செல்ல
துடியிடை மாதைத் துயரிலாழ்த்தியே
கடிதெனக் கனகசபை நடம் காணவோ?
கனகசபாபதி கடுகினன் சபைக்கே.

உங்கள்பிரிவால் துயருறும்:
மனைவி, சகோதரர்கள்,
மைத்துனர்கள், மாமி, உறவினர்கள்.

நீர்வேலி மத்தி,
நீர்வேலி.

(28259)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து அணுமருத்துவத்(பௌதிகவியல்)தில் தற்காலிக உதவி விரிவுரையாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் 93-12-24 வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்

4,585/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு 1993 டிசம்பர் 31 ஆம் திகதி வரை.
5,270/- ரூபா (நிலையானது) மாதமொன்றுக்கு 1994 ஜனவரி தொடக்கம்.

குறிப்பு:-

இதற்கு மேலதிகமாக 1994டிசம்பர்31வரை மேற்குறித்த சம்பளத்தின் 25 சதவீதம் நிலுவையிலுள்ள பணி நிறைவேற்றப்படியாக வழங்கப்படும்.

மேற்குறித்த பதவிக்கான விண்ணப்பப் படிவத்தையும் விவரங்களையும் ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் நிகிக்கிளையில் 20/- ரூபாவினைச் செலுத்திய பின்னர் இப்பல்கலைக்கழக சிரேட்ட உதவிப் பதிவாளரின் (தாபனங்கள்) அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விவரங்களையும் பெற்றுக்கொள்ள விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பதிவாளர்/ நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/-ரூபா பெறுமதியுடைய காசுக் கட்டளை தபாற்கட்டளையுடன் 23 X 10 ச. மீ. அளவுடைய 1/- ரூபா முத்திரையொட்டப்பட்டு சுயமுகவரியிட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும்.

அரச திணைக்களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள் நியதிச்சட்டசபைகளிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

- பதிவாளர்

யாழ்ப்பாணப் - பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
1993 - 11 - 29.

(சி-6611)

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

ஆயுதவியாபாரிகள் படையெடுப்பு

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின் படைகள் வடக்கு – கிழக்கில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக— தமிழர்களுக்கு எதிராக— அவர்களின் உரிமைப் போராட்டத்தை ஒடுக்குவதற்காக— நடத்தும் யுத்தத்தில் அடுத்தடுத்துப் பெரும் தோல்விகளைச் சந்தித்து வருகின்றன.

இந்தத் தோல்விகளின் போது படையினர் தமது ஆளணியினரை மட்டுமன்றி, கோடிக்கணக்கான பணத்தைச் செலவுசெய்து வாங்கும் ஆயுத தளபாடங்களையும் இழக்கின்றனர். கட்டைக் காட்டில் 5 கோடி ரூபா, மண்டிண்டி மலையில் 5 கோடி ரூபா என்றிருந்த அரச படையினரின் ஆயுத தளபாட இழப்பு பூநகரியில் 25 கோடியாக உச்சத்துக்கு உயர்ந்தது.

இதனால் அரச படைகளுக்கு வெறும் தோல்விகளும், இழப்புகளும் மட்டுமன்றி படைகளே விடுதலைப் புலிகளின் ஆயுத பலத்தை வளர்க்கும் நிலையும் உருவாகி உள்ளது.

அரசாங்கம் வடக்கு-கிழக்கில் நடத்தும் யுத்தம், நாட்டின் பொருளாதாரத்தைப் புற்று நோய் போல வெகு வேகமாக அரித்துச் சென்று கொண்டிருக்கிறது.

தமிழர்களின் நிலையை விடுவோம். சிங்கள மக்களில் எழுபது சத வீதமானோர் வறுமைக்கோட்டு நிலைக்குக் கீழே ஒரு நேரச் சாப்பாட்டுக்கும் வழியில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அவர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தி சிங்களச் சமூகத்தின் மேம்பாட்டுக்கு உழைப்பதனை புறந்தள்ளிவிட்டே, ஓரங்கட்டி வைத்துவிட்டே கொழும்பு அரசு போருக்கெனக் கோடானு கோடி ரூபாவைச் செலவிடுகிறது:

சிங்கள மக்களின் வாழ்க்கை நிலை முன்னேற்றம், சமூக மேம்பாடு எல்லாவற்றையும் விட, தமது நியாயமான உரிமைகளுக்காக — பிறப்புரிமைகளுக்காக — போராடும் தமிழர்களை நசுக்கிவிடுவதையே அரசு முதன்மைப்படுத்துகிறது.

இத்தகைய நிலைப்பாடு கொண்ட அரசு எத்தனை தோல்விகள் ஏற்பட்டாலும் எத்தனை ஆளணி, ஆயுத நஷ்டம் உண்டானாலும் யுத்தத்தைத் தொடரும் என்பது உலகத்துக்கு இப்போது தெரிந்த விடயமாகிவிட்டது. மிகக் குறிப்பாக ஆயுத விற்பனையாளர்களுக்கு ஸ்ரீலங்கா அரசின் எண்ணமும் சிந்தனையும் அத்துப்படியாகிவிட்டன.

அதனால் தான் அவர்கள், சந்தர்ப்பத்தை நழுவவிடக் கூடாது என்பதற்காக, காற்றுள்ள போதே தூற்றிக்கொள்வதற்காகக் கொழும்புக்கு விரைகிறார்கள். வியாபாரத்துக்கு இப்படி ஒரு வாய்ப்பு, சந்தை இருக்கும்போது வியாபாரிகள் என்ன, அவர்களின் தரகர்கள் தானும் சும்மாவா இருப்பார்கள்?!

தமிழர்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்குவதாகக் கூறி அரசு யுத்தத்தை நடத்துகிறது. ஆனால் அதனை வைத்துப் பணம் தேடுபவர்கள் பல மட்டங்களிலும் இருக்கிறார்கள்.

பெருந்தொகையைச் செலவிட்டு ஆயுதங்கள் வாங்குவதா என்று உயர்மட்டங்கள் சிறிது தயங்கினாலும் கொள்வனவு அவசியம் என்பதற்கான ''சரிக்கட்டுதல்களை''ப் புனைந்து தமது காரியத்தை சாதித்து விடுவார்கள் உள்விட்டுத் தரகர்கள்!

எதுஎப்படியோ, அரசாங்கப் படைகள் தவணைக்குத் தவணை கொள்முதல் செய்யும் நவீன ஆயுதங்களைத் தமதாக்கி, அவற்றைக் கொண்டே படையினரைத் தோற்கடிக்கும் விடுதலைப் புலிகளின் புதுப் புது போர் உபாயங்களையும், உத்திகளையும் இந்த ஆயுதக் கொள்வனவுகளால் நிறுத்த முடியாதே!

தோல்வி ஏற்படும்போதெல்லாம் மேன்மேலும் ஆயுதங்களை வாங்குவதிலேயே அரசு அக்கறையாக இருப்பது. அது தமிழர் பிரச்சினையை இராணுவ வழியில் தீர்த்து அவர்களை அழித்துவிடவேண்டும் என்ற நிரந்தரக் கொள்கையுடனேயே செயற்படுகிறது என்பதனை மேலும் வலியுறுத்துவதாக உள்ளது; தெளிவாக்குகிறது.

தொண்டமானுக்கு அஞ்சாத முதலாவது ஜனாதிபதி டி.பி.

காமினி ஜெயசூரியா பாராட்டு

கொழும்பு, டிச. 3

தொண்டமானின் வாக்கு வங்கி குறித்து அச்சப்படாத முதலாவது ஜனாதிபதியாக விஜேதுங்கா இருக்கிறார். அவரது துணிச்சலையும் அரசதலைமையையும் நான் பாராட்டுகின்றேன்.

முன்னாள் அமைச்சரும், சிங்களவர் பாதுகாப்பு சங்கத் தலைவருமான காமினி ஜெயசூரியா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் ஆதரவு என்ற கரட்டைக் காட்டி அரசாங்கத்தையும், எதிர்க்கட்சியையும் மணயம் வைத்து தனது கோரிக்கைகளை நிறைவேற்றும் முயற்சியில் தொண்டமான் மீண்டும் ஈடுபட்டுள்ளார் என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தொண்டமானின் கோரிக்கைகளுக்கு விட்டுக்கொடுத்து அவரது ஆதரவைப் பெறுவது குறித்தே அரசியல் கட்சிகள் இன்னும் சிந்தித்து வருகின்றன.

மலைக்கள மக்களின் நலன்கள் குறித்தோ, நாட்டின் நீண்டகால நலன் குறித்தோ தொண்டமானின் கோரிக்கைகள் அக்கறை காட்டவில்லை.

அடுத்த தேர்தலில் தொண்டமான் பிரச்சினை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கப் போகிறது. தொண்டமானுடன் நெருங்கிச் செயல்படும் எந்த அரசியல் கட்சியும் தொண்டமான் குறித்து சிங்கள மக்கள் கொண்டுள்ள அபிப்பிராயம் குறித்து அடுத்த தேர்தலில் அறிந்து கொள்ள முடியும்— இவ்வாறு அவர் அண்மையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (த-எ)

டி.பி. அரசு கடைப்பிடிப்பது பிரேமாவின் கொள்கைகளே

குற்றஞ்சாட்டுகிறார் காமினி

கொழும்பு, டிச. 3

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொள்கைகளையே தற்போதைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கமும் கடைப்பிடித்து வருவதாக ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்கா குற்றஞ்சாட்டியுள்ளார்.

லங்காதீப பத்திரிகைக்கு அளித்த பேட்டி ஒன்றில் திரு. திஸநாயக்கா இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியுடன் தாம் நடத்திய பேச்சுகள் தோல்வியடைந்து விட்டதாகவும்—

ஐக்கிய தேசியக் கட்சிப் பொதுச் செயலாளரும் பிரேஷ்ட அமைச்சருமான சிறிசேன குரேயை விரும்பத்துக்கு இணங்க தாம் செயல்பட முடியாது என்றும் அவர் கூறினார்.

பிரேமதாஸாவின் மரணத்துடன் கெட்டகாலம் முடிந்து விட்டதாக மக்கள் நினைத்தார்கள். அது அப்படி அல்ல என்று இப்போது தெரிகிறது என்றும் அவர் கூறினார். (த-எ)

நல்லை ஆதீன முதல்வருக்கு ஞாயிறு வரவேற்பு விழா

யாழ்ப்பாணம், டிச 3

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகளுக்கு எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 5 மணிக்கு நல்லை ஆதீன பராமரிப்பு நிதியத்தின் சார்பில் வரவேற்பு அளிக்கப்படும்.

இளங்கலைஞர் கலாமண்டபத்தில் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் வரவேற்பு விழாவில் ஆதீன வைப்பு நிதியத்திற்கென ஒரு லட்சம் ரூபா சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியினால் ஆதீன முதல்வரிடம் கையளிக்கப்படும்.

முன்னதாக பிற்பகல் 4 மணிக்கு நல்லை ஆதீனத்தில் இருந்து சுவாமிகள் கோவில் வீதி, சட்டநாதர் வீதி வழியாக இளங்கலைஞர் மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்.

விழாவில் பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை, யாழ். கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம், திருமதி மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் உட்பட பலர் சிறப்புரை வழங்குவர்.

கலாவினோதன் கணபதிப்பிள்ளை குழுவினரின் இல்லிசை நிகழ்ச்சியும் இடம்பெறும். (சு-111)

மத்திய பிரதேச தேர்தல் முடிவுகள்

மத்திய பிரதேசத்தில் மாநில சட்டசபைத் தேர்தல் முடிவுகள் அனைத்தும் வெளியிடப்பட்டு விட்டன.

மொத்த இடங்கள்	— 320
தேர்தல் நடந்தவை	— 316
இந்திரா காங்கிரஸ்	— 171
பாரதிய ஜனதா	— 116
பகுஜன் சமாஜ்கட்சி	— 11
ஜனதா தள்	— 04
இந்தியக் கம்யூனிஸ்ட்	— 02
மார்க்ஸிய கம்யூனிஸ்ட்	— 01
கயேச்சைகள்	— 11

ஆலயங்களில்

கிளாலி புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலய வருடாந்த உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். (சு-117)

★ ★ ★

கந்தர்மடம் பழம் வீதியில் உள்ள ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் நடைபெறும் விநாயக விரதத்தை முன்னிட்டு இன்று பிற்பகல் 3 மணிக்கு வாகீசகலாநிதி க. நாகேஸ்வரன் ''விநாயக மகத்துவம்'' என்னும் பொருளில் சொற்பொழிவாற்றுவார். (சு)

★ ★ ★

மிருசுவில் புனித நீக்கிலஸ் தேவாலய வருடாந்த நவநாள் உற்சவம் கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறுகின்றது.

எதிர்வரும் ஐந்தாம் திகதி மாலை திருநற்கருணை ஆராதனையும் திருப்பலிப்பூஜையும் இடம்பெற்று மறுநாள் காலை திருநாட்பலிபூஜையும் திருச்சொரூபவணியும் இடம்பெறும். (சு-117)

யாகப்பர் ஆலய தாக்குதல்; விசாரணை குழு அமைக்குக

அமைச்சரவைக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், டிச. 3

★ புனித யாகப்பர் தேவாலயம் மீது நடத்தப்பட்ட விமானக் குண்டு வீச்சு குறித்து விசாரிக்க விசாரணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும்.

★ தாக்குதலில் சம்பந்தப்பட்ட விமானிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

★ குண்டு வீச்சில் பலியானவர்களுக்கும், தேவாலயத்துக்கும் போதுமான இழப்பீட்டை வழங்க வேண்டும்.

புனித யாகப்பர் சபைக் குழுவினர் ஸ்ரீலங்கா நாடாளுமன்ற அமைச்சரவைக்கு அனுப்பியுள்ள கண்டனக் கடிதம் ஒன்றில் முன்கண்ட விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

அந்தக் கண்டனக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

ஒரு வழிபாட்டு தலத்தை அழித்ததும், பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த பக்தர்களைக் கொன்றதுமான இந்த மனிதாபிமானமற்ற, ஆத்திரமூட்டக் கூடிய நடவடிக்கைக்கு எதிராக எங்கள் உத்வேகமான எதிர்ப்பை தெரிவிக்கின்றோம்.

தேவாலயங்கள் மட்டுமன்றி அரச செயலகம், பாடசாலைகள், வைத்தியசாலைகள், அப்பாவி மக்களின் குடியிருப்புக்கள் என்பனவும் குண்டு வீச்சிற்கு இலக்காகியுள்ளன.

இவ்வாறன இடங்களில் குண்டு வீச்சை நடத்த வேண்டாம் என ஸ்ரீலங்கா அரசிடம் பல தடவைகள் கேட்கப்பட்ட பின்னரும் படையினர் கண்மூடித்தனமாக குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தி வருகின்றனர்—

இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் ஏற்கப்படும்

பிறப்பு-இறப்பு அத்தாட்சிப் பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை ஏற்றுக் கொள்ளும் வேலைகள் கடந்த முதலாம் திகதி முதல் மீண்டும் யாழ். பிறப்பு-இறப்பு பதிவாளர் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தின் மீது கடந்த மாதம் 12ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதலை அடுத்து விண்ணப்பப் படிவங்கள் ஏற்கும் வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன. (த-100)

வெற்றிலை விலை வீழ்ச்சி

தென்மராட்சி டிச. 3

வெற்றிலையின் விலை வீழ்ச்சியடைந்துள்ளது.

கடந்த புதன்கிழமை பெருமளவு வெற்றிலைகள் சந்தைக்கு வந்ததையடுத்து ஒரு வெற்றிலை 50 சதமாக விற்கப்படுகிறது. (த-117)

வெள்ளப் பாதிப்பு குறித்து அரச அதிபருக்கு அறிவிப்பு

நிவாரணம் வழங்கக் கோரிக்கை

யாழ். குடாநாட்டில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கியதைத் தொடர்ந்து பலர் தமது சொந்த இடங்களைவிட்டு வெளியேறியிருப்பதால் அவர்களுக்கு நிவாரணம் வழங்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பில் தங்கிநிற்கும் யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கு யாழ். பிரதேச செயலாளர் அவசர செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

யாழ். பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் 450 பேர் இடம்பெயர்ந்துள்ளனர். இதில் அரியாலை பூம்புகாரில் 180 குடும்பங்களும், நாவாந்துறை மண்டிட்டி, சூரிய வெளிப்பகுதிகளில் 250 குடும்பங்களும், குருநகர் தொட்டி மாடிப் பகுதியில் 20 குடும்பங்களும் இடம்பெயர்ந்துள்ளன.

தொடர்ந்து மழை பெய்யுமானால் ஆயிரக்கணக்கானோர் இடம்பெயர வேண்டி ஏற்படும் என்றும் அவர் தமது செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை —

வலிகாமம் தென்மேற்கில் கட்டுடை, மாவிப்பாய், நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் பெரும் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மக்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகள் தேவாலயங்களில் தங்கியுள்ளனர். பல வீதிகளை வெள்ளம் மூடியுள்ளது.

நவாலி கிழக்கு, தெற்குப் பகுதிகளில் நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன. நவாலி அரசடி முகாமில் இருந்த அராலியைச் சேர்ந்த 90 குடும்பங்களும், மாவிப்பாய் அதிகார் செல்லமுத்து வீதி முகாமில் தங்கியிருந்த இளவாலையைச் சேர்ந்த 25 குடும்பங்களும் இடம் பெயர்ந்துள்ளன.

மாவிப்பாய் வடக்கு மற்றும் தெற்குபகுதிகளில் உச்சியோடை, செக்கலை, ஆனைக்கோட்டை முள்ளி கிராமம் ஆகியவையும் நீரில் மூழ்கியுள்ளன.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 11 இடம் பெயர்ந்தோர் முகாம்களும், இரண்டு கிராமங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன. இப்பகுதியைச் சேர்ந்த 581 குடும்பங்களைச் சேர்ந்த 2ஆயிரத்து 242 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். (த-17-152-152)

வடக்கு - கிழக்கு யுத்தம் குறித்து

ஓய்வு பெற்ற தளபதிகளுடன் அரச அதிகாரி ஆலோசனை

வடக்கு – கிழக்கில் தற்போது நடைபெறும் யுத்தம் மற்றும் நடப்பு இராணுவ நிலைவரம் குறித்து ஓய்வு பெற்ற முப்படைகளின் தளபதிகள் மற்றும் ஓய்வு பெற்ற இராணுவ சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரின் கருத்துக்களை உயர்நிலை அரசாங்க அதிகாரி ஒருவர் கேட்டறிந்து கொண்டார்.

இச்சந்திப்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் மூன்று மணித்தியாலங்கள் நீடித்தது.

அரசாங்கத்திற்குச் சமர்ப்பிப்பதற்கென ஓர் அறிக்கை அச்சந்திப்பில் தயாரிக்கப்பட்டது. (த-எ)

தென்னைக்கு உரமிடுவதற்கு இது ஏற்ற காலம்; விளைச்சலைப் பெருக்க உடன் செயற்படுங்கள்!

எமது பிரதேசத்தில் தேங்காயின் உற்பத்தியைக் குறுகிய காலத்தில் கூட்டவேண்டுமாயின் முக்கியமாகத் தென்னை மரங்கள் தறிப்பதனைத் தவிர்க்க வேண்டும். அடுத்தபடியாக தென்னை மரங்களுக்கு பசளையிடுதல் அவசியமானதாகும். எமக்கு இலகுவில் கிடைக்கக்கூடிய பசளை வகைகளை உபயோகப்படுத்தல் பொருத்தமானதாகும். பசளை வகைகளை இரண்டாகப் பிரிக்கலாம். 1) சேதனப் பசளை 2) அசேதனப்பசளை. சேதனப் பசளையிடல் முறையில் மாட்டெரு, ஆட்டெரு, கோழி எரு என்பனவற்றை விலங்குக் கழிவிலிருந்தும், தாவரத்தின் இலை குழைகளையும் குறிப்பாக சீமைக்கிளுவை, இப்பில் இப்பில் என்பனவற்றையும் பாவிக்கலாம். அசேதனப் பசளையிடல் முறையில் YPM (இளமரக்கலவை), APM (முதிர்மரக்கலவை) என்பனவற்றைப் பிரயோகிக்கலாம். சேதனப் பசளைகளும் தென்னைக்குத் தேவையான அத்தியாவசியமான கனிப்பொருள்களை முற்றாக வழங்குவதில்லை. எனவே தான் அசேதனப் பசளைப் பிரயோகமும் செய்தல் அவசியமாகின்றது.

தென்னைகளுக்கு சேதனப் பசளையிடல் முறை

பாளை வந்த தென்னை மரங்கள் ஒவ்வொன்றிற்கும் உலர் மாட்டெருவாயின் 20 கி. கி. உடன், சுப்போஸ் பொசுபேற் 400 கிராமும், மியூறியற் ஒவ் பொட்டாஸ் 1 கி. கி. உம் கலந்து அடி மரத்திலிருந்து 3 அடி தூரத்தில் 3 அடி அகலமாக (அடி மரத்திலிருந்து 6 அடிக்கு உட்பட்டதாக) ½அடி ஆழத்திற்கு கற்றவர குழிவெட்டி அதற்குள் இடுதல் வேண்டும். பின்பு இதனை மண்ணால் மூடி காய்ந்த தென்னோலை அல்லது பனை ஓலையினால் மூடிவிட்டால் ஈரலிப்பு பாதுகாக்கப்படும். இதேபோல் ஆட்டெருவாயின் 7 கி. கி. உடன் 700 கிராம் சுப்போஸ் பொசுபேற்றும், 1 கி கி. மியூறியற் ஒவ் பொட்டாசும் கலந்து இதே செயல் முறையில் போடலாம்.

மாடுகளை தென்னைமரத்தில்கட்டுதல்

தென்னை மரத்தின் அடியிலிருந்து 6 அடி தூரத்திற்குட்பட்டதாக 1சோடி மாடுகள் 10இரவுகள் தொடர்ந்து கட்டப்படவேண்டும். எல்லாக் கழிவுகளும் பசளைப்பாத்திக்குள் விழுவதனை உறுதிப்படுத்தத் தக்க வகையில் கட்டுதல் அவசியம். இக்காலத்தின்பின்பு, 200கிராம் சுப்போஸ் பொசுபேற்றும், 750 கிராம் மியூறியற் ஒவ் பொட்டாசும் பாத்திக்குள் விநிறப்பட்டு மண்ணால் மூடவேண்டும். இம் முறை ஒரு வருடத்தில் ஒருமுறை செய்தால் போதுமானது. மிகுந்த வரண்ட காலங்களைத் தவிர்ந்த ஏனைய காலங்களில் இதனைச் செய்யலாம். இப்படி ஒவ்வொரு மரத்திற்கும் செய்வதனால் விளைவு அதிகரிக்கும்.

விளைவு குறைந்து ஒல்லியாகக் காய்க்கும் தென்னை மரங்களுக்கு சாதாரணமாகக் கிடைக்கக்கூடிய சீமைக்கிளுவை என அழைக்கப்படும் கிளிரிசீடியா அல்லது இப்பில் இப்பில் இலைகள் [illegible] புதைக்கும் முறை: அடி மரத்திலிருந்து 1 – 1½ அடி தூரம் தள்ளி 1 அடி ஆழம், 2 அடி அகலமுடையதாக இருக்குமாறு மரத்தின் கால்வாசி வட்டத்திற்கு மட்டும் குழி வெட்டப்படவேண்டும். பின்பு இந்தக் குழியில் 25 கி. கி. — 30 கி. கி. வரையான சீமைக்கிளுவை (கிளிரிசீடியா) இலைகள் அல்லது இப்பில் இப்பில் இலைகள் [illegible] வேண்டும். பின்பு இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை இதே மாதிரி ஏனைய 3 கால்வட்டங்களையும் செய்து முடிக்க வேண்டும். இப்படியான செயல்முறையை தென்னை ஆராய்ச்சி நிலையத்தினர் செய்து ஒரு வருடத்தில் இதன் உச்ச பலனையும் பெற்றுள்ளனர். ஒல்லியாகக் காய்க்கின்ற தென்னைகளுக்கு இந்தச் செய்முறையைச் செய்து நல்ல பலனை அடையமுடியும். தேங்காயின் பருமனும், விளைச்சல் விதமும் அதிகரிக்கும்.

இளம் தென்னங்கன்று, முதிர் தென்னைகளுக்கு செயற்கை உரம் அதாவது YMP.APM உரம் இடுதல்:

5 வருடங்களிற்கு உட்பட்ட பாளை வராத தென்னைகளுக்கு பொதுவாக YPM (Young Palm Mixture) என அழைக்கப்படும் இளமரக் கலவை என்ற உரத்தினைப் பிரயோகிக்கலாம். ஒரு மரத்திற்கு ஒரு வருடத்திற்கு 1200 கிராம் YPM போதுமானது. அடியிலிருந்து 5 அடி வரையான பகுதியை வட்டமாக கொத்திப்புரட்டிய பின்பு மண்ணுடன் ஒரு மரத்திற்கு 1200 கிராம் என்ற விகிதத்தில் தூவல் வேண்டும். பின்பு மண்ணுடன் கிளறிவிடவும். உரமிட்டபகுதிகளுக்கு மேலே, காய்ந்த தென்னோலை அல்லது பனை ஓலையினால் மூடி விடுதல் நன்று.

முதிர் மரங்களுக்கு உரம் (APM) இடுதல்:

மர அடியிலிருந்து 6 அடி தூரத்திற்கு மரத்தைச் சுற்றியுள்ள முழு நிலப்பரப்பிலுள்ளும் APM (Adult Palm Mixture) என அழைக்கப்படும் முதிர் மரக்கலவை தூவப்பட வேண்டும். களைகள் அதிகளவு இருந்தால் ஒழிய உரம் இடும் முன் மரத்தைச் சுற்றி களை அகற்றத் தேவை இல்லை. உரம் இடப்பட்ட நிலப்பரப்பை உலர்ந்த தென்னை ஓலைகளினால் அல்லது தென்னம் பொச்சு ஆகியவைகளினால் மூடப்பட வேண்டும். இப்படியாக மூடுதல் தொடர்ந்த களை வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதுடன் பசளைப் பாத்தியில் ஈரத்தன்மையையும் பாதுகாக்கின்றது. அத்துடன் மண்ணின் வெப்பநிலையைக் குறைத்து மேற்பரப்பு மண் உலர்வதனைத் தடுத்து பிரித்தழியும்போது சேதனப் பொருளை மண்ணுக்குச் சேர்க்கின்றது.

எத்தனை தரம் உரம் இட வேண்டும்

இளம் கன்றுகள்: குறைந்த பட்சம் அரையாண்டிற்கு ஒருமுறையேனும் உரம் இடும்படி சிபார்சு செய்யப்பட்டுள்ளது. சந்தர்ப்பங்கள் சாதகமாக இருப்பின் காலாண்டிற்கு ஒருமுறை உரமிடுவதை மேற்கொள்ளலாம். குறிப்பாக அதிகளவு மழை பெறும் மணல் தரைகளுக்கு இது பொருத்தமாக இருக்கும்.

முதிர்மரங்கள்: உரப்பிரயோகம் ஒவ்வொரு வருடமும் மேற்கொள்ளப்பட வேண்டும். இரு பருவகால மழை விழும் இடங்களில் குறிப்பாக மணற் தரைகளில் அரையாண்டிற்கு ஒருமுறை மழை வீழ்ச்சியின் பின் உரம் இட்டால் பயன் அடையலாம்.

உரம் இடவேண்டியகாலம்

உரங்கள் மழை காலங்களில் மண் ஈரமாக உள்ள போது இடப்படல் வேண்டும். இலேசான மணல் மண்ணிலும் நீர் தேங்கும் தன்மையுள்ள தரைகளிலும் உரப் பிரயோகம் பெரு மழை முடிந்தவுடன் செய்யப்பட வேண்டும்.

உரக் கலவை இடுவதன் அவசியம்

மரங்களின் துரித வளர்ச்சிக்கும், பூக்களும் பாளைகளும் ஒழுங்காகக் குறித்த காலத்தில் ஒழுங்காக உற்பத்தியாவதற்கும், பெரிய தேங்காய் குலைகள் உற்பத்திக்கும், இலைகள் பச்சையாக இருப்பதற்கும், வேர்களின் வளர்ச்சிக்கும் உரமிடுதல் அவசியமாகின்றது ★

ஜெ. சந்திரேந்திரன்
(தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்)

பல்லாண்டுப் பயிர் தென்னை; அழியாது பாதுகாப்போம்

பல்லாண்டு காலப் பயிரான தென்னையை அழியாது பாதுகாப்போம். வருடம் முழுவதும் பலன்தரும் தென்னை வளத்தைப் பெருக்க உடன் உரமிடும் வேலையில் ஈடுபடுவோம். உரமிடுவதற்கு மாரிகாலம் ஏற்ற காலமாகும்.

தேங்காய்க்கு விலை ஏற்றம் கண்டுள்ள இக்கால கட்டத்தில், தென்னை மரங்களுக்கு ஏற்ற உர வகைகளை இடுவதன் மூலம் கூடுதல் விளைச்சல் பெற முடியும். எமது பொருளாதார வளத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும்.

உரம் இடும் முறை குறித்து இக் கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

வருடாவருடம் 5 வருடத்திற்குட்பட்ட தென்னங்கன்று ஒன்றுக்கு 1½ கிலோ கிராம் வை. பீ. எம். (இளம் மரக்கலவை) உரமும், 5 வருடத்திற்கு மேற்பட்ட பாளை வந்த தென்னைகளுக்கு 2½ கிலோ கிராம் ஏ. பீ. எம். (முதிர் மரக்கலவை) உரமும் இடுதல் அவசியமாகும்.

ஆக வயதில் குறைந்த தென்னங்கன்றுகளுக்கு வயதிற்கேற்ப வித்தியாசமான அளவுகளில் உரமிடுதல் வேண்டும். வை. பீ. எம்., ஏ. பீ. எம். உரங்களைப் பிரயோகிக்கும் முறை, தென்னை நாற்று நடுதல், வண்டுத் தாக்கம் பற்றிய தொழினுட்ப ஆலோசனைகளுக்கு தென்னை பயிர்ச் செய்கைச் சபை யாழ். மாவட்ட தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தருடன் நல்லூர் கமநல சேவை நிலையத்தில் தொடர்பு கொள்ளலாம்.

மரண அறிவித்தல்கள்

செல்வி திருச்செல்வம் உஷாநந்தினி

செல்வி திருச்செல்வம் உஷாநந்தினி 23-11-1993 அன்று கொழும்பில் அகால மரணமானார்.

இவர் சரம்பன் மேற்கைப்பிறப்பிடமாகக் கொண்டு கொழும்பில் வசிக்கும் திருச்செல்வம் (கார்த்திகா ரேடர்ஸ், கொழும்பு) தம்பதிகளின் மூத்த புதல்வியும், திரு. திருமதி நடராசா தம்பதிகளின் பேர்த்தியும், சுபா, தரசி, சுகந்தி, கார்த்திகா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25 — 11 — 1993 அன்று கொட்டாஞ்சேனை, 6 ஆம் ஒழுங்கை, 60-ஆம் இலக்க இல்லத்தில் நடைபெற்றன என்பதை அறியத் தருகிறோம்.

தகவல்:
திருமதி அன்னபூரணி நாகராஜா.

61/2, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (28260)

இராஜேந்திரம் ஜோசவ்

இளைப்பாறிய இ. போ. ச ஊழியர் இராஜேந்திரம் ஜோசவ் நேற்றுக் காலமானார். இவர் காலம் சென்ற ஞானம்மாவின் (தாதி, தர்மலிங்கம் ஆஸ்பத்திரி யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், அருள்மலர் (U. K.), ஜோகமலர், ராஜக்கோன் (U. K.), றெஜினா, வனஜா ஆகியோரின் அன்புத் தந்தையும், C. Z. அருளானந்தம் (U. K.), S. திருச்செல்வம் (முல்லைத்தீவு வள்ளச்சாலை உரிமையாளர்), திருமதி யூலி ராஜக்கோன் (U. K.), காலம்சென்ற V. A. யேசுதாசன் (இ. போ ச. கணக்காளர்), J. A. செல்வரத்தினம் (கட்டார்) ஆகியோரின் அன்பு மாமனாரும், திருமதி அஞ்சலா வில்வராஜா (B. Com), T. வத்ஸலா, T. பென்லற் (2 ஆம் வருட பொறியியல் மாணவன் பேராதனை), ஐம்லற் (யாழ். இந்துக் கல்லூரி மாணவன்), J. பிறேமிலா (B. A.), J. கௌரி, J. கொன்சி (வைத்தீஸ்வர கல்லூரி மாணவிகள்), S. பிரதீபன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நாளை சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
S திருச்செல்வம்
(மருமகன்)

48/2, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம். (28266)

திருமதி அமிர்தலிங்கம் மகாதேவி

திருமதி அமிர்தலிங்கம் மகாதேவி 2-12-93 வியாழன் காலை சிவபதம் எய்தினார்.

இவர் அமிர்தலிங்கத்தின் மனைவியும், புஷ்பமலர், புஷ்பலதா, வித்தியரூபா, ஜனதீபன் ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற இரத்தினம்-லட்சுமி தம்பதிகளின் மூத்த மகளும், மகாலிங்கம் (சுவிஸ்), துரைசிங்கம் (பிரான்ஸ்), தங்கராணி, தங்கமலர், பவளமலர் ஆகியோரின் சகோதரியும் குணரத்தினம், ஜெயக்குமார் ஆகியோரின் மைத்துனியும் சதாசிவம் (தேவன்), தேசிங்கன், அருந்தவநாதன், இராசேஸ்வரி, வதி, சாரதா ஆகியோரின் முறை மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் ஏழாலையில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் இன்று காலை 10-00 மணியளவில் ஏழாலை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சி. அமிர்தலிங்கம்
(கணவன்)

ஏழாலை கிழக்கு,
ஏழாலை. (28267)

சின்னத்தம்பி கந்தையா

சங்கானை கிழக்கு, பண்டத்தரிப்பைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா 01-12-1993 அன்று காலமாகி விட்டார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் விளாவெளி மயானத்தில் 01-12-1993 அன்று மாலை 5 மணிக்கு நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
உறவினர்

முல்லையடி,
பண்டத்தரிப்பு. (28268)

அப்பாக்குட்டி மயில்வாகனம்
(மயிலப்பா)

முல்லாத்தனை, தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்போது கட்டுடையில் வசிப்பவருமாகிய அப்பாக்குட்டி மயில்வாகனம் 2. 12. 93. வியாழக்கிழமை சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலம்சென்ற நாகமுத்துவின் (பூரணம்) அன்புக் கணவரும் காலஞ் சென்ற மகேந்திரன், காலஞ் சென்றசிவசுப்பிரமணியம், தெய்வேந்திரன், விசாகதேவி, சிறிகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தங்கராணி, மனோரஞ்சிதமலர், தங்கரத்தினம், சிவகுமாரன் (கிராம சேவை அலுவலர்) சரஸ்வதி ஆகியோரின் மாமனாரும், காலஞ் சென்ற கார்த்திகேசு, காலஞ் சென்ற காமாட்சிப்பிள்ளை, காலஞ் சென்ற தெய்வானைப்பிள்ளை, முருகேசு, ஆறுமுகம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (3. 12. 93) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கட்டுடையில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச. சிவகுமாரன்
கிராம சேவை அலுவலர்

கட்டுடை,
மானிப்பாய். (28265)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 293/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 03-12-1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

இன்று

அகில இலங்கை திருமுறை மன்றத்தினால் வெள்ளிக் கிழமை தோறும் நடத்தப்படும் பன்னிரு திருமுறை முற்றோதல் இன்று வெள்ளி மாலை 4 மணிக்கு நல்லூர் ஸ்ரீ சட்டநாதர் சுவாமி ஆலயத்தில் நடைபெறும். (த)

★ ★ ★

சாவகச்சேரி, டிச. 3

சங்கத்தானை இந்திய வீரகத்திப் பிள்ளையார் கோவிலில் 15 ஆம் ஆண்டு கூட்டுப் பிரார்த்தனை விழா இன்று காலை 8 மணி முதல் நடைபெறவுள்ளது. (இ-ரி)

நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், டிச. 3

செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைமையகத்தினால் சங்கத்தில் அண்மையில் நடத்தப்பட்ட பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் தகுதி வாய்ந்த தட்டச்சு, சுருக்கெழுத்தாளர்களை நியமிப்பதற்கான நேர்முகப் பரீட்சை நாளை சனிக்கிழமை நடைபெறும்.

பரீட்சார்த்திகளின் பெயர் விவரங்களை அலுவலக விளம்பரப் பலகையில் பார்த்து அறியலாம் என்றும் — தனித்தனிக் கடிதங்களும் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் சங்க செயலாளர் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை
பட்டப்பின் டிப்ளோமா
பொது நிர்வாகம்

முதலாவது அரையாண்டுப் பரீட்சை 1993

1993 – 10 – 11 ஆம் பமாகவிருந்து பிற்போடப்பட்ட மேற்படி பரீட்சை 1993 – 12 – 14 தொடக்கம் 1993 – 12 – 19 வரை நடைபெறவுள்ளது. பரீட்சார்த்திகள் இரண்டாம் அரையாண்டிற்கான பதிவை மேற்கொண்டவர்கள் மட்டுமே பரீட்சைக்கு அனுமதிக்கப்படுவர். நேர அட்டவணையையும், அனுமதி அட்டையையும் பரீட்சைக் கிளையில் இரண்டாம் அரையாண்டிற்குப் பதிவு செய்த பிரதிப் பற்றுச் சீட்டைக் காண்பித்தல் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

- பதிவாளர்.

[சி-6635]

விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், டிச. 3

15 வயது, 17 வயது பிரிவு மாணவர்களின் கோட்டமட்டத்திலான உதைபந்தாட்ட முதன்மைப் போட்டிகள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இன்று பிற்பகல் நடைபெறவுள்ளன. இன்றைய ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

★ பிற்பகல் 2 – 30 — 17 வயது பிரிவு — ஸ்கந்தவரோதய கல்லூரி அணி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம்.

★ பிற்பகல் 3-30 மணி — 15 வயது பிரிவு உரும்பராய் இந்துக் கல்லூரி எதிர் ஏழாலை ஸ்ரீ முருகன் வித்தியாலயம். (இ-5)

★ ★ ★

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில்—15 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டிகள்—இன்று பிற்பகல் 2 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இன்றைய இறுதி ஆட்டத்தில் பங்குபற்றவுள்ள பாடசாலை அணிகளின் விவரம் வருமாறு:-

★ 3 ஆம் இடந்தைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம்—சென். ஹென்றீஸ் கல்லூரி அணி எதிர் நெல்லியடி ம.ம வி.

★ முதலாம் இடத்தைத் தெரிவு செய்வதற்கான ஆட்டம்—யாழ். இந்துக் கல்லூரி எதிர் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி அணி.

முதலாம் இடம் பெறும் அணிக்கு தமிழீழ வி.பு. மாணவர் அமைப்பு வழங்கிய லெப். கேணல் இம்ரான் நினைவுச் சுற்றுக் கிண்ணம் வழங்கப்படும். (ஒ-5-89)

★ ★ ★

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்குஇடையே யாழ். கல்வித் திணைக்களம் நடத்திவரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் 19 வயதுப் பிரிவினருக்கான அரையிறுதி ஆட்டங்கள் இன்று காலை 8 மணி முதல் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளன. பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 8-00 மணி:- மகாஜனா எதிர் ஹாட்லி.

★ 9-00 மணி:- ஸ்கந்தா எதிர் சென். ஹென்றீஸ்.

★ ★ ★

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு விழா தொடர்பாக யாழ். கல்வித் திணைக்களம் ஆசிரியர்களிடையே நடத்திவரும் சதுரங்கச் சுற்றுப்போட்டி இன்று காலை 9மணி முதல் யாழ். இந்துக் கல்லூரியில் தொடர்ந்து நடைபெறும்.

வெள்ள நிவாரண கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். மாவட்டத்தில் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10.30 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலர்களையும், வெள்ள நிவாரண நடவடிக்கைகளுடன் தொடர்புடைய அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளையும் இதில் கலந்து கொள்ளுமாறு யாழ். மேலதிக அரச அதிபர் அறிவித்துள்ளார். (இ-5)

தமிழீழ மீட்புநிதி கடன் மீளல்

யாழ்ப்பாணம், டிச. 3

இதுவரை காலமும் தமிழீழ மீட்பு நிதி கடன் மீளளிப்புக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில் கடந்த மாவீரர் வாரத்தில் - தங்கள் கடனை மீளப் பெற்றுக் கொள்ளாதவர்கள் எதிர்வரும் ஞாயிறன்று முற்பகல் 11 மணிக்கு நல்லூர் மங்கையர்க்கரசி மகாவித்தியாலயத்தில் ஒழுங்கமளித்து அதனைப் பெற்றுக் கொள்ளலாம் என தமிழீழ மீட்பு நிதிப் பொறுப்பாளர் சொ. வெற்றிஅரசன் அறிவித்துள்ளார். (இ-5)

மார்கோ கப்பலில் மண்எண்ணெய்

யாழ்ப்பாணம், டிச. 3

யாழ். மாவட்டத்துக்கான நவம்பர் மாத கோட்டாவான 4 ஆயிரத்து 500 பரல்கள் மண்எண்ணெயை "மார்க்கோ" என்ற கப்பலில் ஏற்றும் வேலைகள் கொழும்பு துறைமுகத்தில் நேற்று ஆரம்பமாகியதாகத் தெரிவிக்கப்பட்டது.

தற்சமயம் மண்எண்ணெய் எடுத்து வர அமர்த்தப்பட்ட 'கோமாரி' கப்பல் திருத்த வேலைக்கு செல்வதால் "மார்க்கோ" என்ற கப்பலை புனர் வாழ்வு அமைச்சு இந்த பணிக்காக அமர்த்தியுள்ளது.

அடுத்த வார முற்பகுதியில் இக்கப்பல் பருத்தித்துறைக்கு வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

விமான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னாள் ஆயர் அதி. வண டி. ஜே. அம்பலவாணர் ஆகியோரும் ஊர்வலத்தில் கலந்து கொள்ளவுள்ளனர்,

யாழ். மறைமாவட்ட அனைத்துப் பங்குகளைச் சேர்ந்த மக்களும் பாடசாலை மாணவர்களும், அரச ஊழியர்களும், மற்றும் பொதுமக்களும் ஊர்வலத்தில் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ் மக்களின் போராட்ட உணர்வினையும், ஒருமைப்பாட்டையும் பிரதிபலிக்கும் வகையில் இன்றைய மௌன ஊர்வலத்தில் பங்கு கொண்டு வெகுஜன எழுச்சியை வெளிப்படுத்துமாறு யாழ். மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (இ-5-51-17)

பல்கலை. தெரிவானோருக்கு தற்காலிக ஆசிரிய நியமனம்

கொழும்பு, டிச. 3

பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவான மாணவர்களுக்குத் தற்காலிக அடிப்படையில் ஆசிரிய நியமனம் வழங்க அரசு நிர்மாணித்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது

கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலப் பாடங்களில் தேர்ச்சி பெற்று பல்கலைக்கழக அனுமதிக்காகக் காத்திருப்பவர்கள் தற்காலிக ஆசிரிய நியமனங்களுக்கு உட்படுத்தப்பட இருக்கிறார்கள்.

இவர்களுக்கு மாதம் ஆயிரத்து 500 ரூபா அலவன்ஸாக வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஆங்கிலக் கல்வியைத் தகுந்த முறையில் போதிப்பதற்காக 19 ஆயிரம் பேர் புதிதாக சேர்க்கப்படவுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

க. பொ. த. (சா/த) பரீட்சை மாணவரின் கவனத்திற்கு

மொழித்திறன் தேர்வு - 1993

இருபாலை தமிழ் மாமன்றத்தின் மொழித்திறன் தேர்வுக்கு கட்டணம் செலுத்திய ஆண்டு – 11 வகுப்பு மாணவர்களின் தேர்வு நாளை (04 – 12 – 1993) சனிக் கிழமை காலை 8-30 மணிக்கு நடைபெறும். யாழ்ப்பாணம், நல்லூர் பகுதி மாணவர்கள், யா / இந்து மகளிர் கல்லூரிக்கும், கோப்பாய், நீர்வேலி, உரும்பராய் பகுதி பாடசாலை மாணவர்கள், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கும், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி மாணவர்கள், தெல்லிப்பளை யூனியன் கல்லூரி (மருதனார்மடம்)க்கும், மானிப்பாய் பகுதி மாணவர்கள் மானிப்பாய் மகளிர் கல்லூரிக்கும், கோண்டாவில் பகுதி மாணவர்கள் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் நேரில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். சுட்டெண் உடன் வழங்கப்படும். ஏனைய ஆண்டு 10,9, 8,7,6, க்குரிய எமது தேர்வு பின்னர் நடைபெறும்.

- பொதுச்செயலாளர்.

தமிழ் மாமன்றம்,
இருபாலை. (28263)

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்.

மக்கள் வங்கி
எழுதுவினைஞர் / சுருக்கெழுத்தாளர்
போட்டிப் பரீட்சை பயிற்சி வகுப்புகள்

ஆரம்பம்:- 06 - 12 - 1993
காலை:- 9-00 மணி

ஆசிரியர்
அ. குமாரவேல்
— நியக்குநர்

(சி/6578)

கண்ணீர் அஞ்சலி

கந்தையா நாகலிங்கம்

(முன்னாள் ஆசிரியர்,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி)

01–12–1993 இல் எமது முன்னாள் ஆசிரியர் கந்தையா நாகலிங்கம் அவர்களது மறைவையொட்டி எமது ஆழ்ந்த கவலையையும், அஞ்சலியையும் செலுத்துகிறோம்.

— ஆசியர் கழகம்

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. (சி/6639)

கண்ணீர் அஞ்சலி

செல்வி திருச்செல்வம் உஷாநந்தினி

23 — 11 — 1993 இல் அகாலமரணமான செல்வி உஷாநந்தினியின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. திருமதி நாகராஜா,
பிள்ளைகள்.

61/2, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம். (28264)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
கணனி கல்வி நிலையங்களுடன்
இணைந்து நடத்தும்

கணனி இலத்திரனியல் கண்காட்சி

COMPUTER & ELECTRONICS EXHIBITION

- கணனி இலத்திரனியல் பற்றிய அறிமுகம்
- கணனியின் பிரயோகங்கள்
- கணனியின் விந்தைகள்
- சிறுவர்களுக்கான கணனி விளையாட்டுக்கள்
- இலத்திரனியல், கணனி தொழில் நுட்பம்

யாழ். பல்கலைக்கழகத்தில் 1993 டிசம்பர் 1 ஆம் திகதியிலிருந்து காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறும் மேற்படி கண்காட்சி பாடசாலை மாணவர்களினதும், பொதுமக்களினதும் நன்மை கருதி டிசம்பர் 4 ஆம் திகதி சனிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரவேசம்: ரூபா 10/- சிறுவர்களுக்கு ரூபா 5/-

— தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்.

[சி-6637]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org